சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: 1889 விரோதி ஐப்பசி மீ 26-ஆம் உ

வெளியீடு 1989-3-2

இலங்கையிற் செய்தித் தாளாகப் பதிவு பெற்றது, பதிவு இல - 2

இந்து சாதனம்

பிரதி விலை ரூபா 1-00

Hindu Organ

புத் - 99, 100 | யாழ்ப்பாணம்:- விபவ ஐப்பசி மீ 2 (17-02-1989) | [இல - 30

ஏதொரு உருவமிலா இறைவன்

இலிங்க மூர்த்தமானர்

இது எவ்வாறென்றோர் இலக்கிய ஆய்வு

★ அளவை ஊர் வித்துவான் சி. நா. கணேசபண்டிதன். ★

திரு வி. க. அவர்களிடம் கேட்டுத் தெளிந்த பெருமைக் குரிய வித்துவான் சி. நா. கணேசபண்டிதன் ஒரு கலாவிநோதன். சோதிடம் வைத்தியம் சித்தாந்த தத்துவம் செந்தமிழ் ஆராய்ச்சி என்ற வகையிற் பலதுறைப்பண்டிதன் ஆகத் தண்டமிழ்த் தொண்டனாக விளங்கும் இந்த அறிஞர் பலவடி விநாயகர் ஒருபா ஒருபது, இணைவக்கந்தனிடம் முறையீடு, முதலிய பல செய்யுள் நூல்களை இயற்றிப் புகழ்பெற்றவர்.

அருவமும் உருவமும் அல்லாத திரு மேனியை உடைய எம் சிவம் எவ்வாறு உருவங்களாகிய இலிங்க மூர்த்தங்களாகினன் என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

உலகம் இயற்கை வனப்பினை உடையது. ஆரணியப் பிரதேசங்கள் ஆங்காங்கே உண்டு. மலையும் மலை சார்ந்த இடங்களும் ஆரணியங்களுக்கு உகந்தவையாக இருந்தன. இமாசலம் உயர்ந்த பர்வதம். அதன் பாங்கரில் உயர்ந்த மலைத் தொடர்கள். அத் தொடர்களில் ஊறி வரும் நீர் வீழ்ச்சிகள், ஆங்காங்கே சிறு குன்றுகளூர், குகைகளும் பொருந்தி அழகுபட நிற்கும் காட்சி, அதனூடு தண்நிழல் பரப்பும் தருக்களும் செழுஞ் சோலைகளும் உண்டு. அச் சோலைகளுள், தேனூறுகின்ற சுகந்த மலர்த் தொகுதிகளும் இன்சுவை பயக்கும் கனி வர்க்கங்களும் நிறைந்து காணப்படுவதனால் கற்பகப் பொழிலெனக் காட்சிதரும் மாட்சியை உடைய பிரதேசத்தில் நைமிசாரணிய வனம் அமைந்துள்ளது. இயற்கை வனப்புக்கள் அமைந்தது. தெய்வீகத் தன்மை பொருந்தியது; அற்புதமானது.

இந்த ஆரணியத்தைப் பிரமதேவனுவன் பல மகரிஷிகளின் வேண்டுகோட்கிணங்கித் தவச் சாலையாக மாற்றியதனால் அது நைமிசாரணிய வனம் என்று பெயர் பெற்றது.

நேமி - சக்கரம், சாரணியம் - வீடு, நவம் இதுவே நைமிசாரணியமென உரைத்தற்கு உரிய தாயிற்று. முனிவர்கள் தாங்கள் தவமியற்றுவதற்குத் தகுதியான இடத்தைத் தருகவெனப் பிரமனை வேண்ட அவர் தர்ப்பையொன்றை எடுத்து நேமி) சக்கரமாக்கி அதனை உருட்டி 'இதன் பின் செல்லுக' எனமுனிவரை ஏவி, இது நிற்குமிடம் தவம் செய்வதற்கு உரியதாகும் என்றனர். அவ்வகை 'நேமி' நின்ற இடமே நைமிசாரணிய வனம் என்னும் காரணப் பெயர் ஆயிற்று.

மன்னுயிரைத் தன்னுயிராய் மதித்த மாதேவர்கள்

இவ்வனத்தில் முனிவர்கள் யோகத்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்

மஹா துவஷ்டா மணி மண்டப மாண்பு விழா

திருக்கேதீஸ்வரத்திற் சிறப்பாகத் திறப்பு நிகழ்ச்சி

அனைத்திலங்கை விஸ்வகர்ம சங்கத்தின் அழகிய அமைப்பு

○●○

தை அமாவாசைத் தீர்த்தப் புண்ணிய தெய்வீக சீர்த்திக்கு, பழம்பெரும் தேவாரத் திருத்தலமாகும் திருக்கேதீச்சரத்தில் விளங்கும் மெய்யன்பர்களால் அமைந்த உபயம் இது.

பழைய வளமுள்ள அந்தச் சிறந்த கைங்கரியத்துக்காக அண்மையில் மஹா துவஷ்டா மணிமண்டபம் ஒன்று மது, மய, துவஷ்டா சிற்பி, விஸ்வக்ஞர் ஆகிய விஸ்வப் பிரமகுலப்பெருங்குடி மக்களினால் அமைக்கப் பெற்றது. தொன்மை வரலாற்றினர் தொடர்பாக விளங்குகின்றது.

சரித்திரம் கலிகாலத்திலும் தொடர்ந்து விருத்தி அடைய முடியும் என்பதற்கு இந்த அறநிலைய அமைப்பும் அப்பெருங்கைங்கரியத்தை உபயஞ் செய்த நுண்கலைப் பண்பிலுயர்ந்த நன்மக்களின் சமயப் பேரன்பும் அபிமானமும் பேரெழுச்சியாகும்.

மகாதவஷ்டாப்பேர் மணிமண்டப பத்தாம் யுகாதி வரலாற் றுணர்ச்சி - தகாத கலிகாலத் திற்கொரு காப்பே விசுவ கலிகாணும் நுண்மான் கவின்.

தொழில் எழிலால் விளங்கிய பழங்குடியினர்

விஸ்வகுல விற்பன்னர்கள் வரலாற்றில் இடம் பெற்ற எழிலுடையவர்கள்

திருக்கேதிச்சரம் சிறந்த சான்று.

மதிநுட்பத்தால் வாழ்க்கைக்கு வேண்டியனவற்றை நிர்ணயித்து ஆற்றலுடன் நிருபித்த அநந்தநிறனரின் பெருமையைச் சங்க நூல்கள் சங்நாதஞ் செய்து துலக்குகின்றன.

ஒரே ஒரு உதாரணம். (இந்த இதழில்)

முத்தொள்ளாயிரத்தில்,

வரைபொரு நீள்மார்ப வட்கார் வணங்கும்
நிரைபொரு வேல் மாந்தைக் கோனே

என்றும்,

வேழாஉம் தூணைத்தோட் பூழியர் மெய்ம் மறை
இலங்கு நீர்ப்பரப்பின் மாந்தையோர் பொருந

என்று பதிற்றுப்பத்திலும் - வருவன காண்க.

பட்டினத்தடிகள் கூடப் பத்திப் பாடல்களில்

''திசை முகனூர் வருநாளின் முன் வந்த மாந்தைக் கண்ணனூர்'' என்றனர்.

கண்ணனூர் தாம் யார்.

சிற்பர் ஓவியரே மோகர் சித்திரகாரர் நாமம்
அற்புதர் இயவனர் கொல்லர் அக்கசாலையர்
பூவேந்தோர்
கற்பில் கம்மியரே கண்ணுள் வினைஞர் கண்ணுளர்
நாமம்

இன்னும்

உழவு தொழிலே வரைவு வாணிகம்
வித்தை சிற்பம் என்றித் திறத்தொழில்
கற்கும் நடையது கருமபூமி

என்று திவாகரம் செப்புகின்றது.

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

தையும் மாசியும் வையகத்துறங்கு.

மெய்தான்!

வை - வைக்கோல் பழந்தமிழர் பண்டு பார்த்தீர்களா. வயல் தருவளத்தை முற்றுகப் பயன் படுத்தினர், வீடு வேய வைக்கோலை உபயோகித்தனர்.

காலநிலை இப்பொழுது சுடும் வெயில், கடும்பனி. மாரி பொய்த்ததால் ஏரிகளில் நீரில்லை. பூமி புழுங்கிப் போய் விட்டது.

இருந்தும் ஏழை மக்கள் கூலிக்கு மாட்டார்கள், தோட்டம் துரவு, வயல் கூழனி இவற்றிலே தொழில் நடந்து கொண்டே இருக்கும்.

பனியைக் கண்டு பயப்படமாட்டார்கள்.

திருமந்திரம் முற்றும் ஓதல் பாடும் பணியே பணி

யாழ் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தானத்தில் வருகிற 21, 22, 02, 89 செவ்வாய், புதன் இரு தினங்களும் திருமூலர் அருளிய திருமந்திரப்பாக்கள் 1500ம் ஓதி வழிபட விரைவடிய வர்கள் முன்வந்துள்ளனர். அமரர் மருத. நமசிவாய தேசிகரது ஆண்மசாந்திப் பிரார்த்தனை வழிபாடாக அமையும் முற்றும் ஓதலில் அவசியடியவர்கள் பலர் கலந்து பாடும் பணியே பணியாய்க் கொள்ளுவர். (இ)

★ புண்ணியம் பூரிந்திடக் கண்ணியம் விரிந்திடும் ★

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ராணினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தியதெல்லா மரனுமமே
சூழ்க வையகமுந் துயர்தீக்கவே.
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

விபவ ஞூ மாசி 6 (17 - 02 - 1989)

பைந்தமிழ்ச் சங்கப் பலகை அமைந்தால்!

சுத்தமாகத் தாய்மொழி நிலவுவது யாழ் நாட்டில் என்று பல பேரறிஞர்கள் தாங்கள் சுவைத்ததைச் சொல்லிக் காட்டியிருக்கின்றனர்.

செந்தமிழ் என்று சிறப்பாகச் சொல்லப்படும் மொழியின் வளம் சங்க காலத்திலிருந்து வளர்ந்ததொன்று.

சங்க காலத்து நூல்களெல்லாம் செந்தமிழ்ச் சீரிய ஆக்கங்கள்; இலக்கண வரம்புக்கமைந்து இலக்கிய மரபு பொருந்தியனவாகவேயுள்ளன.

அவ்வாறான செவ்விய நூல்களிலும் புலவர்கள் வழுக்கண்டு கண்டனம் செய்திருக்கின்றனர்.

சங்கப்புலவர்கள் என்ற பேரவையினர் கற்றோர்க்குத்தாம் வரம்பாகியவர்கள் என்ற புகழுக்குடையவர்களாயிருந்தனர்.

நூல்கள் அந்நாட்களில் நூல்களாகவே அமைந்தன. தொல்காப்பியத்திலே நூல், எவ்வாறு இலக்கணம் பெற்றிருக்கின்றதோ அவ்வாறே அக்காலத்து வெளியீடுகள் விளங்கின.

இவ்வளவு அருமையான பாரம்பரியத்துக்குரிய யாழ் நாட்டிலே இப்பொழுது வெளிவரும் நூல்கள் சங்கப் பலகை அங்கம் வகிக்கக் கூடிய புலவர்களினால் ஆராயப்படின் அவற்றின் தரா தரம் புலனாகும்.

மாணாக்கர்களுள் மத்தியில் வழங்கும் தமிழ் நூல்கள் யாவும் பல கலைப்புலமை வாய்ந்த பேரறிஞர்களால் ஆராயப்பட்டு நன்கு கலையப்பட வேண்டிய நிலைமை தோன்றியிருக்கின்றது.

இதற்காகப் புலமை வாய்ந்தவர்கள் ஒருங்கு கூடி ஒரு சங்கப் பலகையை அமைக்க வேண்டும். அந்தச் சங்க அமைப்பில் உள்ளவர்கள் இப்பொழுது பயன் படுத்தப்படும் நூல்கள் பற்றிய கருத்தினை வெளியிடுதல் வேண்டும்.

பல்கலைக்கழகக் கலாநிதிகள் எல்லோருடனும் சிறந்த புலவர்களும் பேரறிஞர்களும் சேர்ந்த சங்கம் நிறுவப்படுதல் மிக முக்கியமானதாகின்றது.

இந்தப் புதிய யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தை யாழ் பல்கலைக்கழகத் தமிழ் பேராசிரியர்கள் கூட்டவேண்டியது முறை. அத்தகைய சங்கமே இன்று இந்நாட்டில் விளங்கும் தமிழ் நூல்களை நன்காராய்ந்து, தரம் பிரித்து, புதுக்கியும், திருத்தியும், வழுக்கள் களைந்தும், பிழைகளை விளக்கியும் புதிய நூல்களை வெளியிடுதல் மொழித்தொண்டாவதுமன்றி கலைப்பணியுமாகும்.

எழுத்துநடை, சொற்பிரயோகம், மங்கல மரபு பேணல் என்று இன்னன பற்றிக் கலாநிதிகள் துணிந்து சொல்லுதல் வேண்டும்.

நூல் எல்லாம் நூலாமோ! என்றார்களே. முற்றிலும் உண்மையே. எழுத்துக்களை அடுக்கினாற் சொல்லாகும், சொற்களை நிரைப்படுத்தினால் வசனமாகுமா? வசனத்தை வரிபிரித்தால் கவியாகுமா? — இல்லையே.

நாவலர் இருந்த காலத்திற்கூட நூல்கள் இயற்றுவோர் பெரும் விழிப்பாயிருந்தனர். பின் கண்டனப் பண்டிதர்கள் சிலரைக் கண்டு நூலியற்றுவோர் சற்று நின்று யோசிக்கலாயினர்.

இப்பொழுதோ அப்படியொரு அச்சத்துக்கு இடமில்லை. எதையும் எப்படியும் எழுதலாம் என்பது வழமையாய் விட்டது.

பைந்தமிழ் செந்தமிழ் ஆக விளக்கப்பணி செய்ய யார் முன்வரப்போகின்றனர் —பார்ப்போம். ○●○

ஏதோரு உருவமிலா .....

1-ஆம் பக்கத்து வளர்ச்சி

தமர்ந்து சிவஸ்மரணை பண்ணுதலும், வேள்வி வளர்த்தலும், வேத கீதங்களைப் பாடுதலும், காலை மாலை சந்தியாவந்தனை செய்தலும் ஆகிய சன்மார்க்க நியமங்கள் புரிதலிலேயே தம் கடமையாகக் கொண்டனர். மாசற்ற மனத்தினராகிய மாண்புமிகு மகான்கள் ஆசையை அளவறிந்தும் கருதார்து ஆரணியத்தில் அமைந்துள்ள கனி தந்த மூலாதாரங்களையும், சருகுகளையும் பசிக்குப் புசித்து அருவி நீரை அள்ளி உண்டு மன்னுயிர் யாவையும் தன்னுயிர் போல் எண்ணும் மாதவராய் பரம சாந்த நிலையில் இருந்தார்கள். இஞ்ஞானிகள் பரம் பொருளாகிய சிவபெருமானை எல்லா ஆன்மாக்களிடத்தும் ஒளி காட்டுவதை ஞானத்தால் உணர்ந்து அன்பு காட்டினர். அதனால் அவர்கட்கு எறும்பு முதல் யானை ஈருக உள்ள பிராணிகள் எந்த ஒரு தீங்கையும் செய்தில

'நமச்சிவ ய'வே நன்னெறிகாட்டிடும்

காமாதிகளை வென்ற காரண்ய முத்தர்களாக அத்திரி ஆங்கீரசன், புலத்தியன், துர்வாசன், சமதக்கினி, கௌதமன், வசிட்டன், வான்மீகி, வாமதேவர், காசியர், நாரதர் முதலிய முனிபுங்கவர்கள் நைமிசாரணிய வனத்திலிருந்து கண்மூடி மௌனியாகிச் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து வரம் பெற்று வாழ்ந்தவர்களிற் சிலராவர். இன்னும் காலக்கடன் முடித்து நீறு நிறை மேனியராய் உத்திராக்கச் சமூத்தினராய் மாவிருட்ச நிழலில் இருந்து பசு பதியாகிய பரமனைப் போற்றி மகிழ்ந்திருந்தனரென்று வேத ஆராய்வினுல் அறியக்கிடக்கின்றது.

"ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும்
நேசத்தால் நீதிநின்ந்து கொள்"

என்பது ஔவை வர்க்கு.

ஆரணியத்தருகே இருந்து முனிவர்களிடையே சதுர்வேத சம்பன்னரும் புராணப்பெருக்களருமாகிய சூதமுனிவர் (விபாசரின் மாணாக்கர்) எழுந்தருளினார். முனிவர்கள் அன்பு கொண்டாடி அரவணைத்துப் பெருமானின் மகிமையைப் போற்றிப் புகழ்ந்தனர். பஞ்சாட்சரம் என்பது நமசிவாய என்னும் சொற்றொடர். சிவனுக்கு நமஸ்காரம் எனப் பொருள் தரும். சித்தாந்த நூல்கள் கூறும் ஆற்றல் நகரம் உயிர்கள் உலகியலிற செல்வதற்குத் துணை செய்யும், கடவுளுடைய மறைப்புச் சக்தியைக் குறிப்பது. மகரம் மலமாகிய உலக பாசத்தைக் குறிப்பது. சிகரம் சிவமாகிய கடவுளைக் குறிப்பது. வகரம் வீடு அடைவதற்குத் துணை செய்யும் அருட்சக்தியைக் குறிப்பது. யகரம் உயிரைக் குறிப்பது. விளக்கம் ஏதெனில் ஆணவத்திற் கிடக்கும் உயிரினைப், பிறவிக் கூட்டினுட் செலுத்தி, உலகியலிற் புகுத்தி வரும் போது, ஆணவம் நீக்குதற்குரிய பக்குவம் வந்த காலை கட்டுக்களை ஒழித்து அருட்சக்தி வாயிலாகத் தன் பல் வீடு பெறுவித்தல் இதனுற் கடவுட் பெருந்தன்மையை திருவைந்தெழுந்து விளக்குவதாகும். ஓசை உணர்ச்சியில் மகார இரகசியம் அடங்கியுள்ளது. அது என்னவெனில் சன்மார்க்க நியமமுடன் சாதனை புரிவோர்க்கு சித்த சாந்தியை அளிக்கும் என்க.

பக்தர்கள் சித்தர்கள் முத்தர்கள்

ஆஸ்திக நாஸ்திக வாதங்கட்கும் மனம் வாக்குக்கும் சாதி சமயங்கட்கும்

(வளர்ச்சி 3- ஆம் பக்கம்)

நூற்றுண்டு விழாத் தொடர் நிகழ்ச்சி: 15

சிவமயம்

சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

புண்ணியநாச்சியம்மையார் தினம்

காலம்: 19-02-89 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மு. ப. 3-30 மணி
இடம்: நாவலர் ஆச்சிரம மண்டபம் (நீராவியடி)

நிகழ்ச்சி நிரல்

1. விசேஷ பூஜை
2. தேவாரம்
3. பண்ணிசை: ★ அகில இலங்கைத் திருமுறை மன்றம்
★ சைவ அபிவிருத்திக் கழகம், நாயன்மார்கட்டு,
★ நாவலர் தர்மப் பாதுகாப்புச் சபை, யாழ்ப்பாணம்.
4. தலைமையுரை: திரு. சி. இராசேந்திரன் அவர்கள் (தலைவர், சைவபரிபாலன சபை)
5. விரிவுரைகள் 1. திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் (இந்துசாதனப் பத்திராதிபர்) விடயம் புண்ணியநாச்சியம்மையாரின் தர்மநோக்கு

2. சைவப்புலவர் திரு. க. சிற்றம்பலம் அவர்கள் விடயம் சைவபரிபாலன சபையும் புண்ணியநாச்சியம்மையாரும்"
6. நன்றியுரை
7. தேவாரம்

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 1) காலை 8 மணி விநாயகர் தீர்த்தோற்சவம் கோவிலில் விசேட அபிஷேகஆராதனை.

2) நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லத்தில் மாகேசுர பூசை.

சி. இராசேந்திரன் தலைவர்
த. சண்முகலிங்கம் செயலாளர்

வ. கந்தசாமி
நூற்றுண்டு விழா அமைப்பாளர்

450, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.
13-02-89

அடியார்க்கும் அடியார் அப்பூதியடிகள்

(10-02-89 இதழின் வளர்ச்சி)

அந்த அப்பர் அடியார் எப்படித்தோற்றம் தந்தார். தூய வெண்ணீறு அணிந்த பொன்மேனியும் தாழ் வடமும் நாயகன் சேவடி அதுவரு சிந்தையும் நைந்துருகிப் பாய்வது போல் அன்புநீர் பொழிகண்ணும் பதிகச் சொன்மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதி உள்ளே நி நாவுக்கரசரின் வருகையை வர்ணிக்கின்றார். வாக்கினுற் சொல்ல வல்ல பிரான் யாவரும் சென்னியி இருந்துஏற்றும் சேக்கிழார் தமிழ்ப்பிரான்.

வக்குவாதம் உச்சநிலை அடைந்ததும் சொல்வேந்தர் தாம் யார் என்று சொல்லவே வந்துவிட்டது.

"பிறதுறையில் நிலை பேற அருளுபெருஞ் சூலையினுல் ஆட்கொள்ள அடைந்துய்த்த தெருளுமுணர்வில்லாத சிறுமையேன்" என்று பரகசியத்தை வெளிவரச் செய்தனர் நாவரசர். அவ்வளவுதான் அடியார்களுக்கு, "கரகமல மிசை உவியக் கண்ணுதலி பொழிந்திழிய உரை குழறி உடம்பெல்லாம் உரோமம் புளகம் பொலியத் தரையின் மிசை வீழ்ந்தவர்தம் சரண கமலம் பூண்டார்" அடியார்.

புராண படனத்துக்குப் புத்தகங்கள் இல்லை!

யாழ் நாட்டிலே, நாவலர் வித்துவ சிரோமணி புராண படனம் பரப்பிய பரம்பரை நாட்டிலே, திருவிளையாடற் புராணப் புத்தகம் அரிதாய் விட்டது. என்ன பழியோ இது.

புதுப்புது நூல்கள் புற்றீசல் போல வெளி வருகின்றன. ஆனற் பழையன, எங்கள் பண்பாட்டுக்குரியனவற்றைக் காணுமே!

சுத்தப் பதிப்புக்களாகத் திருவிளையாடற் புராணம் திருவாதவூரர் புராணம் அவசியம் தேவைப்படுகின்றன என்பதைச் சைவ சங்கங்கள் நோக்குவார்களாக.

★ "சத்தி சிவ" என்று சொல்ல சித்தம் தெளியுமே மெல்ல ★

இறைவனுக்கு இன்னமுதூட்டி இன்புற்ற நாயனார்

தாய்போலத் திருவமுதூட்டியதாற் தாயானார் அருந்துணை மனைவி ஆன் ஐந்து ஏந்திய திருவினார்

புனித போசனமும் ஆவினைப்போற்றி ஐந்து பயனாற் பஞ்ச கௌவியம் படைத்து, பசுபதீசுவரரை வணங்கும்பாக்கியமுள்ள பாரியாரின் நல்லொழுக்கமும் ஒருங்கு சேர்ந்து உயர்நிலையிற் சிவப்பேறு பெற்ற திருத்தொண்டர் அரிவாட்டாய நாயனார்.

சோற்று வளத்தாற் போற்றப்படும் சோழநாட்டிலே கணமங்கலம் என்னும் கரும்பு தேன் சொரியும் ஊரிலே தோன்றியவர் தாயனார் என்றும் அரிவாட்டாய நாயனார் என்றும் வழங்கிய திருத்தொண்டர்.

மண்ணிடைற்புகுந்தும் திருமாட்காண முடியாத அரனாரின் இரு பாதங்களைத் தொடர்ந்துள்ளார் என்று சேக்கிழார் பெருமான் நாயனாரின் சிவதொண்டினைப் போற்றுகின்றார்.

தாயனார், தந்தையாய தாணுவுக்கு இன்னமுது எங்ஙனம் அமைத்தார் என்று சேக்கிழார் சொல்லும் செந்தமிழில் இன்பம் துலங்குகின்றது.

மின்னு செஞ்சடை வேதியர்க் காமென்று
[illegible] ரடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வுங்கொணர்ந்
தன்ன வென்று மமுதுசெய் விப்பரால்

இந்த நன்னிலைக்கு இன்னல் வந்துவிட்டது. ஆவதாய் அழிந்தது வயல்வளம். அந்த நிலையிலும் சிந்தை கெடாது முந்திய முறையிலே அமுது படைத்தல் தொடர அரும்பாடுபட்டார் அடியார். என் செய்வார் இன்னலும் பாராரா நாயனார் கூலி வேலை செய்து நெல் கொணர்ந்து பரமருக்கமுது படைப்பர்.

மனைமாட்சி மகாராசியான துணைவி பஞ்ச கௌவியங்களை யேந்திய வண்ணம் பக்தர் சிகாமணியான பத்தாவுடன் சென்ற பொழுது தடுமாறி விழுந்தனர்; விழும்பொழுதே அமுதும் தடுண்டு சீர் குலைந்தது. சிந்தை கலங்கினர் சிவனடியார், செய்வதறியாது திகைத்தனர். அரிவாளை உருவிக் கழுத்தில் அமைத்து உயிரைப் போக்கும் பொல்லாங்கைப் பரம் பொருள் கருணைத் தடங்கடல் பொறுத்திலர்;

இந்த இடத்திலே திருத்தொண்டர் அரிவாள் கொண்டு தமது கழுத்திலே அதனை அமைத்த செயலைச் சேக்கிழார் ஆக்கச் சீருடன் விளக்குகின்றது. புராணத்தின் கலைப்பொலிவினை எடுத்துக்காட்டுகின்றது.

உறுபிறப்பு அரிவார் ஒத்தார் அடியார்
ஆட்கொள்ளு மையர் தாமிங் கமுதுசெய்திலர் கொலென்றாப்
பூட்டிய அரிவாட் பற்றிப் புரையற விரவு மன்பு
காட்டிய நெறியின் உள்ளத் தண்டறக் கழுத்தினோடே
ஊட்டியு மரியா நின்றார் உறுபிறப் பரிவார் ஒத்தார்.

அம்பலத்தாடுமையரின் அசரீரி "விடேல் விடேல்" என்று எழுந்தது. அந்தமாவடுவைக் கடித்தலால் எழுகின்ற ஒலி போல திருக்கரம் அந்த அரிவாளைப் பற்றித் திண்மையாய்ப் பிடித்தது. அச்சத்துடன் கூடிய கூறு நீங்கியது. அப்பொழுதே அடியாரின் செவ்வினையும் விட்டு நீங்கியது. இந்த அருஞ்செயலால் அரிவாட்டாய நாயனார் ஆனார் அடியார்.

அடியனே னறிவி லாமை கண்டு மென்னடிமை வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே போற்றி
துடியிடை பாகமான தூயநற் சோதி போற்றி
பொடியணி பவளமேனிப் புரிசடை புராண போற்றி.

என்றவர் போற்றிசெய்ய இடபவா கனராய்த் தோன்றி
நன்றுநீ புரிந்த செய்கை நன்னுதலுடனே கூட
ஒன்றிநம் உலகில் வாழ்வா யென்றவ ருடனே, நண்ண
மன்றுனே யாரு மையர் மழவிடை உகைத்துச் சென்றார்

தைத் திருவாதிரை – குருபூசை நாள்

உ

சைவசமயபாடப் பரீட்சை 1989

பரீட்சை நடைபெறுங் காலம்: 12-11-89
விண்ணப்ப இறுதி நாள்: 30-6-89

விண்ணப்பப் படிவங்கள் 1. 6. 89க்கு முன் அனுப்புவோம்.

இங்ஙனம்
தங்கள் தொண்டிற்குரிய
வ. கந்தசாமி
கௌரவ பரீட்சைச் செயலாளர்

சைவபரிபாலன சபை
1-2-89

சைவ சமயப் பொது அறிவு

வினாக்களும்விடைகளும்

பாலர் ஞானோதய சபை
காசி விநாயகர் ஆலய
வெளியீடு

பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணஐயர் அவர்கள் தலைமையிற் பாலர் ஞானோதய சபை நாற்பத்திரண்டாம் ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட சைவ சமயப் பொதறிவு – வினாக்களும் விடைகளும் என்ற தொகுப்பு. அச்சபை நடத்தும் மாணாக்கர் பயிற்சிக்காக அவ்வப் பொழுது ஆசிரியர் சிவஸ்ரீ சிவ. கணேசலிங்கக் குருக்கள் அவர்கள் நடாத்திய பாடங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட வகையிலுள்ளது.

ஆகவே இத்தொகுப்பு முழுமையாகச் சைவ சமயப் பொதறிவு விளக்கம் தருவதாக அமையாது. எனினும் பாலர் வகுப்புக்களிலே பயன் தரக்கூடிய வகையில் உள்ளது பாராட்டத்தக்கது.

இதில் வரும் விடைகளை கற்பிக்கும் ஆசிரியர் மேலும் விளக்கம் கொடுத்துப் படிப்பிக்க வேண்டும்.

இந்த வெளியீட்டு குறிப்புரை வழங்கியவர்கள் பேராசிரியர் சிவஸ்ரீ ப. கோபாலகிருஷ்ணஐயர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் பேராசிரியர் ப. லசுந்தரம் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகக் கூறின் இப் பாலர் ஞானோதய சபை செயல் முறையில் நன்கு விரிந்து வருகின்றதென்றும் ஆசிரியர் ஆலயக் குருக்கள் அவர்கள் நல்ல ஊக்கமும் நோக்கமும் உடையவர்களாயிருக்கின்றனர். என்றும் அங்கு பயிலும் பாலர்கள் படிவாக இப்பயிற்சியிற் பயன் பெறுகின்றனர். என்றும் இவ் வெளியீடு புலப்படுகின்றதெனலாம்.

○●○

கந்தன் கருணையை உகந்து புராணந் தந்த கச்சியப்பர்

மாக்கதை பாக்கவின் மீக்கொள நோக்கும் சித்தாந்தம்

காஞ்சிக் குமரகோட்டத்து அருச்சகர் கந்தக் கடவுளின் சிந்தனைச் செல்வர் கச்சியப்பசிவாசாரியர் தமிழுஞ் சைவமும் மிளிர்ந்து துலங்க எழுந்த வித்தகர்களில் உத்தமர்வரிசையில் உள்ளவர். இந்த அமருந்தன்ன வளத்தைத் தந்த அந்தணர் சிரோமணியின் குருபூசை சென்ற புதன்கிழமை வழமைபோல மாவைக் கந்தசுவாமி கோவிலிலே ஆதீன கர்த்தா மகராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள் தலைமையில் விசேட வழிபாடாக நிகழ்ந்தது. கந்தபுராண படனம் முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. அகில இலங்கைச் சைவமகாசபை இந்த உபயத்தை ஆண்டு தோறும் அளித்து வருகின்றது.

அடுத்து நிகழ விருக்கும் சிவராத்திரி விரதவேளையில் அடிமுடி தேடும்படலத்தை அடியார்கள் படித்து, அகந்தை யாரைத்தான் அகப்படுத்தி ஆட்டி வைக்காது என்ற பாடத்தை அறிந்து கொள்வர்.

அரியும் அயனும் அரிய தொரு பாடம் படித்தனர். இருவரும் கருவம் விடுத்தனர். இறையை அறியும் நெறியை ஈசன்பால் இறைஞ்சிக் கேட்டனர்.

உன்னை யுணரு முணர்வு
புரித்தா லுன்னைப்
பின்னை யுணர்வேம் பெரும,
சிறியேஞ் செய்த
புன்னெறியை யெல்லாம்
பொறுத்தியாற் றஞ்சிறுவ
ரென்ன செயினும்
இனிதன்றோ ஈன்றவர்க்கே.

வ்வாறு அரிய அறிவுரைகளைக் கச்சியப்ப முனிவர் கந்த புராணத்திலே தந்த பேராசிரியராக விளங்குகின்றார்.

கிரப்பெருவடிவ விருத்தம் கவிக்கவின் விருத்தியாக அமைந்து கந்தபுராணத்தின் கலைப்பொலிவடிவமாக விளங்க வைக்கின்றார் கச்சியப்ப கவிக்கான்.

அண்ணலார் குமரன்மேனி
அடிமுதன் முடியின் காறும்
எண்ணிலா வூழி கால
மெத்திற நோக்கினாலும்
கண்ணினா லடங்காதுன்னிற்
கருத்தினா லடங்கா தென்பர்
எண்ணினா னமருக் கென்கை
யருளென நாட்டலாமே.

சேக்கிழார் சுவாமிகளும் கச்சியப்ப சிவாசாரியரும் மாக்கதை புனைவதில் வாழ்மொழி தமிழ் ஆள் மன்னர்கள் அன்றோ!

= =

மாசி மகத்தன்று பூரண சந்திர கிரகணம்

இலங்கை, இந்தியா, மலேசிய நாடுகளிற்றோன்றும்

நிகழும் மாசித் திங்கள் ஒன்பதாம் நாள் (20-2-1989) திங்கட்கிழமை இரவு பூரண சந்திர கிரகணம்.

இரவு மணி நிமி.	
ஸ்பர்சம்	7. 14
பூர்ணாரம்பம்	8. 26
மத்யம்	9. 05
பூரணமுடிவு	9. 44
மோக்ஷம்	10. 56
கிரகபரிமாணம்	1. 27

அசுவினி, மகம், பூரம், உத்தரம் 1ம் கால், மூலம், உத்தராடம் 2ம் 3ம் 4ம் கால் திருவோணம், அவிட்டம் 1ம் 2ம் கால்கள் இவற்றில் பிறந்தோருக்குக் கிரகண தோஷமுண்டு.

அன்று பூரணை சிராத்தம் மறுநாள் கொள்ளப்பட வேண்டும்.

ஏதோரு உருவமிலா . . . .

2 ஆம் பக்கத்து வளர்ச்சி

எட்டாததாகி சச்சிதானந்த மயமாய், சர்வ வியாபகமாகி, எங்கும் நிறைந்து, அண்ட புவன சராசரங்களை இயங்கச் செய்கின்ற பெரும் சக்தி வாய்ந்த சிவபரம் பொருள் பராசக்தியுடன் அதிர்ஷ்சாஸ்டமாகி, அரூபமாகிய ஆகாயத்தினிடத்தே சொரூபமாகிய முகிலினங்கள் தோன்றி நலம் தருவது போல், கிருபைக் கடலாகிய சிவபெருமான் ஆன்ம கோடிகளிடம் அன்பு, அறிவாய் விளங்கி அவரவர்களின் வினைக்கீடாகத் தடுத்தாட் கொண்டு, உய்விக்கின்றான். பெருமான் குணதத்துவங்களையும், சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற தத்துவங்களால் அப்பெருமானது திருவருள் பெற்று அறம், பொருள், இன்பம், வீடு என்னும்நான்கு புருடார்த்தங்களையும் குறைவற பெற்றோர்களையே, பக்தர்கள், சித்தர்கள், முக்தர்கள் என்று உலகம் போற்றுகின்றது.

சன்மார்க்க நியமங்களை அனுஷ்டித்துத்தம்மை இருதய கமலத்தில் அன்பு கனிந்துருகிச் சரணடைந்த அடியார்களின் பொருட்டு அவரவர் தியானிக்கும் வகையாக உருவெடுத்து விளையாடல் புரிந்துள்ள திருநாமங்கள் கூடிய வைபவங்கள் அநந்தம், அநந்தம். அவையுள்ளுள் ஆண்டவனுக்காக அடியார்கள் அனுபவிக்கும் அறுபத்து நான்கு திருவிளையாடல்களும் இலிங்க மூர்த்தி தொடக்கம், சிஷ்ப பாவம் வரை, சொல்லப்படுகின்ற திருவிளையாடல்களின் உருவங்கள் ஆகும். அவையே சிவபரம் பொருளின் தனித்துவமான மூலாதார விளக்கங்களை எடுத்

(வளர்ச்சி 4 ம் பக்கம்)

★ சங்கரன் நாமங்கள் சொல்ல மங்களமாகும் அங்கெல்லாம் ★

Hindu Organ

FEBRUARY (17. 02. 1989)

Practical training for printers

Technical training in the northern region has gained great importance during the past two decades. The arts, science, handicrafts that receive attention in technical institutes are varied However, it has not captured the imagination of the promoters of technical education to enable them feel that printing is also an art, if not a science, which needs particular training both in theory and in practice.

The printing trade has developed in the province so rapidly and extensively that the personnel required for the efficient job of printing books, newspapers, magazines and other miscellaneous writings cannot be said to be equal to the ever increasing demand.

Newspapers, periodicals, magazines, and other regular publications in educational establishments create such a massive volume of work that trained printers have to be requisitioned in greater numbers.

Allmost everybody rushes into print; consequently printing has become not merely popular but also indispensable.

Hence the urgency of the need for instruction in the art of printing and the science of that art.

Materials required for printing have also to be made easily available in the northern region. This offers a great opening for a new enterprise that would enhance the broadening of the economy in this area.

In other words a Technical School for Journalism and Printing, fully equipped, becomes absolutely necessary. in the context of present – day demands in the northern region.

Highly trained technicians in printing are required. and similarly qualified journalists are also a need.

We would urge the need for the establishment of a echnical institute for the exclusive instruction in printing.

பொன் கொழிக்கும் பூமி இது அல்லவா?

மலைவளம் அதனில் மரிவளர், ஆகவே மாநதி வளம் ஒருங்கமைந்த நட்டினைப் பொன்கொழிக்கும் பூமி என்பர்.

அத்தகைய விருத்திபெற்றது பாரத பூமி.

இருந்தும் குன்றும் குளிர் நீர் வள நதியும் ஒன்றும் இலாத ஓர் நாட்டிலே பொன் கொழிக்க வளம் உண்டு என்பதை எங்கள் முன்னோர் எடுத்துக் காட்டியிருக்கின்றனர்.

இயற்கை வளமாகப் பணமரப் பெருவரம் பெற்ற நாடு எங்கள் நாடு. கற்பக விருட்சம் என்று நற்புகழ் பெற்ற பணநனி வளரும் யாழ் நாட்டிலே பொன் கொழிக்க வைக்கலாம் என்று புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

ஒவ்வொரு உறுப்பும் ஒரொரு பயன் தரும் பான்மையது பணமரம் இலக்கண நூலாரும் இதனை எடுத்துச் சூத்திரத்தில் அமைத்திருக்கின்றனர்.

பனை என்ற சொல்லின் முன் காய் என்ற சொல் வரும் பொழுது புணர்ச்சி நிகழ்ச்சியினால் பனங்காய் என்றபதந் தோற்றுகின்றது என்றுரைக்கின்றது அச் சூத்திரம் இலக்கியத்தில் ஆங்காங்கே இலங்குகின்றது இச் சொல்.

பதநீர் என்ற ஓர் இத பானம் இந்நாட்டு மக்களுக்கு அந்நாட்களிலே உயர்ந்த சிற்றுண் ஆகப் பயன் படுத்தப்பட்டது. கோடை காலத்தில் கூடும் வெயிலின் வெப்பம் விலகுவிக்கும் ஆயாசத்தைப் போக்கும் கருப்பநீர் - இதில் விருப்புடையவர்கள் யாழ் மக்கள்.

பானம்மட்டும் அல்லப் பதநீரின் பயன். பழந்தமிழ் மன்ன அரசிகள் இந்த அருமந்த நீரை அக்கினி தேவனின் அருள் ஆட்சியுடன் பணியாக்கிப் பதன்எடுத்துப் பனங்கட்டி உண்டாக்குவர். தித்திப்புச் சுவைக்குச் சுத்தமான பொருள் இது பதநீர் காய்ச்சும் ஆச்சியர் அதனைப் பலவேறு வடிவமாக அமைப்பர். அதைப் பாதுகாப்பதற்காகப் பன ஓலையையே பயன் படுத்திக் குறுகிய கூடை செய்து (குட்டான்) அதனில் இடுவர் ஆண்டு பலவாக இவ் பனங்கட்டி நீண்ட காலம் பழுதிலாது பயன் தரும்.

சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியினால் அமைக்கப்பெற்ற யாழ். நாயன்மார்கட்டு தாமரைத் தடாக ஸ்ரீ அரசடி விநாயகர் தேவத்தான புநராவர்த்தன அட்டபந்தன திருமஞ்சன

மகா கும்பாபிஷேகம்

★-●-★

யாழ்ப்பாணத்து நல்லூர்ப் பதியின் மெய்க்கே வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கச் செந்தமிழுஞ் செந்திருவுஞ் சுந்தர நடனஞ் செய, செந்தண்மை பூண்ட அந்தணர்களும், வேதாரணிய சைவக் குருக்கள் பரம்பரையினரும், பேரறிஞர்களும் புராண இதிகாசவிற்பன்னர்களும், சித்த ஆயுள்வேத மருத்துவ சோதிட பரம்பரையினரும் வையகுல இலகர்களும், விருந்தோம்பும் பண்பு நிறைந்த வேளாண் செல்வர்களும், புண்ணிய சீலர்களும் வாழும் இக் கிராமத்தில் சமயகுரவர்களாகிய நாயன் மார்களது குருபூசைகளே நெறி தவறாது பூசித்துவர மடங்கள் பலவற்றைக் கட்டுவித்துப் பூசையையுந் தொடக்கி வைத்து நாயன்மார்கட்டு என்னும் நன்னாமம் விளங்கக் காரணமாயிருந்த நல்லூரை இராசதானியாகக் கொண்ட சிங்கை யாரிய சக்கரவர்த்தியினுலமைக் கப்பெற்று சங்கிலியசெகராச சேகரரின் மாமனுரும் இரகுவம்சவடமொழிக்காப்பியத்தைத் தமிழிற் பாடிய மகாவித்துவானுமாகியஅரசசேகரி மன்னனுற் கட்டுவித்த தாமரைத் தடாக மும், அரச மரமும் பொருந்த மூர்த்தி, தலம், தீர்த்தம் விருட்சம் என்னும் முப்பெரும் சிறப் ம்சங்களைக் கொண்டு விளங்கும இந்த அரசடி விநாயகர் தேவஸ்தான மகாகும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்கள் புண்ணிய சீலர்களே.

பிரதம சிவாசாரியாரும், கோவிற் குருக்களும், உதவிக் குருக்கள் பலரும் கும்பங்களைச் சுமந்த வண்ணம் வேதமந்திர பாராயணம் செய்ய திருமறைக் காட்டில் நால்வரை எழுந்தருளச் செய்தாற் போன்று திருவுருவங்களை இளம்பாலகர் தாங்கி வர அ. இ. திருமுறை மன்றமும் யா. நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக்கழகமும், மகேஸ் வரி வித்தியாலய மாணவர்களும், ஆசிரியர்களும் இணைந்த திருமுறைக் குழுவினர் திருமுறை ஒதிவர, மேளவாத்திய ஒலியும் புடைசூழ்ந்து வரும் மெய்யடியார்களின் அரகர ஒலியும் வானைப் பிளக்க, விநாயகப் பெருமானது புதுக்கிய சுந்தரவிமான தூபிக்கும் வசந்தமண்டப,வைரவ,நாகதம் பிரான் தூபிகளுக்கும் குறித்த சுபமுகூர்த்தத்தில் ஒரே நேரத்தில் அபிடேகம் நடைபெற்ற காட்சி யாம் அறியற்புதமாட்

அளவெட்டி - நாகேஸ்வரம்

ஸ்ரீ நாகவரத நாரயணர் பிரபந்தத் திரட்டு

ஆக்கியோன்: அளவையூர் அருட்கவி. சீ. விஜுசித்தம்பி அவர்கள்

அச்சகம்: ஸ்ரீமகள் பதிப்பகம்: அளவெட்டி

திருப்பள்ளி எழுச்சி, தோத்திரமாலை, திருப்பொன்னூசல் திருப்பொற்சுண்ணம், திருமஞ்சனம், மணிவெண்பா, அநுபூதி மனோன்மனி அந்தாதி, முச்சந்தி, மும்மணிமாலை அமைந்த அரிய பிரபந்தத்திரட்டு, வழிபாட்டுக்குரிய கைநூல்.

பத்திக்கும் பைந்தமிழ்ப் பண்புக்கும் நாரணன்
சித்திக்கும் சிந்தை தெளிவிக்கும் — முத்திக்கும்
அருட்கவி ஆரமு தானந்தம் இம்மை
பொருட்கவிலும் ஈயும் புவிக்கு

தொழில் எழிலால் விளங்கிய

1 ம் பக்க வனர்ச்சி

மனு மயன் தொட்டா - என்ற பெயர்கள் வரலாற்று மான்புடையன்

இனைய தன்மையு மேனவுந் நல்கியே
மனுவின் முதை வருதலும்
தொட்டாமனுத் தொன்மயனைத் தனது
சுதரென்ன முன்னமுதவி
என்ற கந்தபுராணக்கவி மிழ்விக்கின்றது காண்க.

கைத்தொழில் வித்துவம் கூட்டும்

— "இறை - ஒளி"

மெய்த்தொழில் கைத்தொழில்
வித்துவம் கூட்டும்
விண்ணிடை நண்ணவும்
விற்பனம் காட்டும்
சித்தவ யித்தியத்
திண்மையும் நாட்டும்
செந்தமிழ் முந்தையர்
தந்தனர் பாட்டும்.

பற்பல கற்றிடப் பல்கலீ யுண்டு
பற்றினர்க் குற்றிடும் சொற்சுவை கொண்டு
முற்பவ முற்றிட நற்சிவ தொண்டு
முற்பட நிற்பவர் வாழ்வுகற் கண்டு.

ஏதொருஉருவம்...

3 ஆம் பக்கத்து வளர்ச்சி

துக் காட்டுவனவராகும். இவைகளை வேதத்தின் மூன்று காண்டங்களில், உபாஷன காண்டத்தில் விளக்கமாக எடுத்துக் காட்டுகின்றார் சூத முனிவர். (வளரும்)

சியைத் தொடர்ந்து பூஜை ஜும்ம ஹோமங்களாய் அருள் முதமாக மாறிய திருக்குடத் திருமஞ்சன நீரை பிரதம சிவாசாரியர் விநாயகப்பெருமானின் திருமுடியில் இருந்து பெருகிக் கொண்டிருக்கும் அமுத நீருடன் பெருமானது உருவத்திருமேனியில் அபிஷேகஞ் செய்தனர். கிரியை முறைகள் ஒரு சிறிதும் வழுவாது. தரிசித்தவர்கள் மானிடப் பிறவியின் பெரும் பயனையும் கண்கள் பெற்ற நற் பேற்றையும் ஒருசேர அடைந்தோம் என்று ஆனந்த பரவசமடைந்தனர்.

நல்லொழுக்கும் ஆகமமந்திர அறிவும் பக்தியும் ஆன்மார்த்த பராத்த நைமித்திய பூசை முறைகளும் பெருமானுடைய உருவத்திருமேனியை அலங்கரித்தலும் ஆகிய சிறந்த அம்சங்கள் பலவும் பொருந்திய இந்த தேவஸ்தானக் குருக்களே கும்பாபிஷேக பிரதம சிவாசாரியாராக விருந்து போற்றத்தக்க இக்கும்பாபிஷேகம் நிறைவேறியது விநாயகப் பெருமானின் திருவருள் மேன்மையாகும்.

அபிடேகத்தோடு சேர்ந்த வணக்க முறைகள் அடியார்களுக்கு வரப்பிரசாதமாகவே யிருந்தன அவற்றுள் தசதரிசனத்தில் ஒன்றாய பிம்பதரிசனக் காட்சி கயிலாயம் போன்றிருந்தது. மகா அபிஷேகத்துக்கு இடைவேளை தேவஸ்தானஆதீன கர்த்தர் சிவ ஸ்ரீசெ. சதாசிவக் குருக்களும் கும்பாபிஷேகப் பிரதம சிவசாரியர் சிவஸ்ரீ சதாசிவ மகாலிங்க சிவக்குருக்களும் அ. இ. தி. மன்றத்தாலும், யா நாயன்மார்கட்டு சைவ அபிவிருத்திக் கழகத்தாலும் பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றனர்.

மாலைவேளை நடந்த சொற் பொழிவில் திரு சி. சிவானந்தம் கலைமாமணி அவர்கள் விநாயக வழிபாடு நமக்கு மாத்திரம் உரியதன்று. கடல் சூடந்த கீழைத்தேய மேலைத்தேயத்தவர் பலராலும் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது எனக் குறிப்பிட்டார். எல்லோருக்கும் காட்சியளித்துத் திருவருள் பாலிக்க எழுந்தருளிய விநாயகப்பெருமான் திருவிதியுலா அடியார்களை மெய்சிலிர்க்க வைத்தது.

கா. இரகுநாதன்
அ இ.தி. மன்றம், செயலாளர்,
யா. நா. சை. அபிவிருத்திக் கழகம் (உதவியவர்)

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்

யாழ். சைவபரிபாலன சபையின் 100 வது நினைவு வெளியீடாக யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின்

சைவ வினை விடை

முதற்புத்தகம்

வெளி வந்து விட்டது

இப் பத்திரிகை யாழ்ப்பணம் சைவ பரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம்காங்கேசன்துறை வீதி, 450 - ஆம் இலக்கத்தில் உள்ள சபையாரது சைவப்பிரகாச அச்சகத்தில் 1989 ஆம் ஆண்டுதைமாதம்(17-02-1989) அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

தொலைபேசி: 22356.

ஆசிரியர் ; நவ. சிவப்பிரகாசம்